பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 07 புதன்கிழமை 21.05.2025 கதிர் 193

## இது ரகசியம் அல்ல!

வடக்கு கரையோரக் காணிகளை அரசுடமையாக்கும் தனது கபடத் திட்டம் அம்பலப்பட்டுப் போனதை அடுத்து, அதனை இப்போது சமாளிக்க முற்படுகின்றது ஆளும்தரப்பு. ☞ 2

## கொழும்பில் வீட்டிலிருந்து ரி- 56 ரகத் துப்பாக்கி மீட்பு

கொழும்பு ஹெவ்லொக் நகர் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வீடொன்றில் இருந்து ரி-56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் துப்பாக்கி கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெவ்லொக் நகர் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் பெண்ணொருவர் தமது வீட்டிற்குள் ரி-56 ரக துப்பாக்கியை எடுத்துச்செல்வதைக் கண்ட அந்த அடுக்குமாடி குடியிருப்பின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர், இது குறித்து பொலிஸாருக்குத் தகவல் அளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர், வெள்ளவத்தை பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று, வீட்டை சோதனை செய்து, துப்பாக்கியை கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த பெண் 67 வயதுடையவர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

அவரது காரின் பின்புற கதவு திறந்திருந்தபோது, ஒரு பையில் தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கி இருப்பதைக் ☞ 8

## வடக்கில் 6,000 ஏக்கரை அரசுடமையாக்கும்
# வர்த்தமானி அறிவித்தலினை மீளப் பெறுவது மட்டுமே தீர்வு
### தமிழ் அரசு செயலாளர் சுமந்திரன் திட்டவட்டம்

**வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை அரசுடமையாக்கக்கூடிய வகையில் ஆளும்தரப்பு விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தலை முழுமையாகத் திரும்பப் பெறுவது மட்டுமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு என்று தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர்** ☞ 2



## பிரதமருக்கு உயிரச்சுறுத்தல் விசாரணைகள் தொடக்கம்

பிரதமர், பொலிஸ்மா அதிபர் மற்றும் அரசியல்வாதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள உயிரச்சுறுத்தல் குறித்து முறையான விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம். எதிர்க்கட்சித் தலைவர் மீது ஸ்னைப்பர் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக் கிடைக்கப் பெற்ற தகவல் போலியானது என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது 27/2 இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் விடுக்கப்பட்டுள்ள உயிரச்சுறுத்தல் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ☞ 2

### வடக்கு காணி சுவீகரிப்புக் குறித்து
## மே 23 தமிழ் எம்.பிக்களுடன் பிரதமர் ஹரினி சந்தித்துப் பேச்சு

வடக்கு மாகாணத்திலுள்ள காணிகள் தொடர்பில் கடந்த மார்ச் மாதம் ஆளும்தரப்பினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் குறித்து எழுந்திருக்கும் பிணக்குகள் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் பிரதமர் ஹரினி அமரசூரியவுக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி ☞ 8

## இந்தியாவுடனான ஒப்பந்தங்களை ஆளும்தரப்பு ஏன் ஒளிக்கின்றது?
### தயாசிறி எம்.பி. நாடாளுமன்றில் கேள்வி

இந்தியாவுடன் இலங்கை கைச்சாத்திட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தில் “இந்தியாவினால் இலங்கையில் ஆயுத களஞ்சிய சாலையை உருவாக்க முடியும்“ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை பகிரங்கப்படுத்துவதில் ஆளும்தரப்பு ஏன் பின்வாங்குகிறது. இந்த வாரத்திலாவது ஒப்பந்தங்களை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று வலியுறுத்திறேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பின் குறைகளைச் சுட்டிக்காட்டும்போது நாடாளுமன்றத்தின் ‘லொக்கா‘ என்று குறிப்பிட்டுக் கொள்ளும் நபர் எம் மீது போலியான பல குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார். ☞ 8

## போர் வெற்றியை பாதுகாக்கவேண்டும்
### மகிந்த ராஜபக்ச அழைப்பு



நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதற் காகவே போர் இடம்பெற்றது. மாறாக யாரையும் பழிவாங்குவதற்காக அல்ல. எனவே போர் வெற்றியைப் பாதுகாக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையில் அமைந்துள்ள போர் வீரர் நினைவு தூபியில நேற்று செவ்வாய்கிழமை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் போர் வீரர் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு ☞ 8

## 10 குற்றக் கும்பல்களுடன் அரசியலாளர்களுக்கு தொடர்பு

போதைப்பொருள் உள்ளிட்ட திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் 10 குழுக்களுடன் அரசியல்வாதிகள் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

குற்றச்செயல்களை தடுப்பதற்காக ஆளும்தரப்பு முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று விளக்கமளிக்கும் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் ☞ 8

## துப்பாக்கிச் சூடுகளைக் கட்டுப்படுத்த எடுத்துள்ள நடவழக்கைகள் என்ன?
### எதிர்க் கட்சித் தலைவர் ஆளும்தரப்பிடம் கேள்வி

கடந்த 8 மாதங்களில் 79 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், 52 இறப்புகளும் பதிவாகியுள்ளன. இதனை கட்டுப்படுத்த ஆளும்தரப்பு எடுத்திருக்கும் வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் என்ன என கேட்கிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.



நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் கேள்வி எழுப்பி உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார், அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு நாட்டின் குடிமக்களின் வாழும் உரிமையை ☞ 8

## இராணுவத்தினரை அவமதித்தார் அநுர
### கம்பன்பில புதுக் குற்றச்சாட்டு

இராணுத்தினர் அனைவரும் சிப்பாய் என்ற போதிலும், அனைத்து சிப்பாய்களும் இராணுவ வீரர்கள் அல்ல. போரில் நேரடியாகப் போராடியவர்களே இராணுவ வீரர்களாவர். ஆனால் அனைவரையும் சிப்பாய்கள் என விளித்து ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க இராணுவத்தினரை அவமதித்து விட்டார் என பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பிவிதுரு ஹெல ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

மே 23 இது தொடர்பில் வடக்கு கிழக்கில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஒரு கலந்துரையாடலுக்கு பிரதமர் ஹரினி அழைப்பு விடுத்துள்ளார். அதற்கு முன்னதாக மே 18 காணி அமைச்சு இந்த விடயத்தில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுவது இடைநிறுத்தப்படுவதாக அறிவித்திருந்தது.

இவை எல்லாமே வெறும் கண்துடைப்பு நடவடிக்கைகளே. இப்படிக் காலத்தை இழுத்தடித்து மே 28 வரை கடத்திவிட்டால், உரிமை கோரப்படாத காணிகள் அனைத்தும் அரசுக்குரியவையாகிவிடும். உத்தியோகபூர்வமாக அவை தனது காணிகள் என்பதை அரசு அறிவிப்பது மட்டுமே எஞ்சியிருக்கக்கூடிய நடவடிக்கை. காணி அமைச்சின் மே 18 அறிவிப்புப்படி இந்த அறிவிப்பு விடுக்கப்படுவதை மட்டுமே அரசு இடைநிறுத்தியுள்ளது. எப்படியாக இருந்தாலும் அரசு வர்த்தமானி மூலம் அறிவித்த காணிகளில் தமது உரித்துக்காக விண்ணப்பித்த தனியார்களின் ஆவணங்களைப் பரிசீலித்து அவை அவர்களுடையவைதானா என்று உறுதிப்படுத்தவே ஆளும்தரப்-புக்கு பல மாதங்கள் அல்லது சில ஆண்டுகளாவது செல்லும். அதன் பின்னரே எஞ்சிய காணிகள் தமக்குரியன என்ற அறிவிப்பை ஆளும்தரப்பு மீண்டும் விடுக்கும். ஆக மொத்தத்தில் இப்போதைக்கு ஆளும்தரப்பு இடைநிறுத்தியிருக்கும் நடவடிக்கை என்பது காணிகளை உரிமை கோரும் தனியாரின் விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதைத்தான். பின்னர் இவர்கள் 5 ஆண்டுகளைக் கடத்தி விட்டுச் சென்றாலும்கூட அடுத்து வரப்போகும் ராஜபக்சக்கள் ஆட்சியோ, ரணில் ஆட்சியோ, சஜித் ஆட்சியோ இந்தச் சட்டத்தை வைத்து காணிகள் அரசுடமை, இதை நாம் செய்யவில்லை என்பிபி ஆட்சிதான் செய்தது என்றுபாசங்குபண்ணுவார்கள். எதுஎப்படியோ அவர்கள் எல்லோரும் சேர்ந்து தமிழர்களின் காணிகளை அரசுடமையாக்கிவிடுவார்கள்.

இந்தக்காணிநிர்ணயகட்டளைச்சட்டத்தின் அபாயம் அல்லது பயங்கரம் குறித்து தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் தெளிவாக எடுத்து விளக்கியிருக்கிறார். அது தொடர்பான செய்தி இன்றைய முன்பக்கத்தில் வெளியாகி இருக்கின்றது. காணி அமைச்சின் அறிவிப்பு வந்த உடனேயே இந்தச் சட்டத்தின் பின்னால் உள்ள அபாயம் குறித்து நானும் இந்தப் பத்தியில் உடனடியாகவே குறிப்பிட்டிருந்தேன்.

உண்மையில் அரசுக்குக் காணி தேவையெனில் அதற்கு காணி சுவீகரிப்புச் சட்டம் இருக்கிறது. இதன் கீழ் காணி உரிமையாளர்களுக்கு காணியின் பொறுமதியில் இழப்பீடு வழங்கிய பின்னர் அரசு தனது தேவைக்காகத் தனியார் காணிகளைச் சுவீகரிக்கலாம். அதைத்தான் இதற்கு முன்னர் இருந்த ராஜபக்சக்கள், ரணில் ஆகியோர் செய்தனர். ஆனால், அப்படி இழப்பீடுகூடவழங்காமல்தனியார்காணிகளை அரசுடமையாக்கும் மிகப் பிற்போக்கான கபடத் திட்டத்தை இந்தக் காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் மூலமாக நிறைவேற்ற முயற்சிக்கிறது இந்த என்பிபி ஆட்சி.

இதற்கெதிராக ஒன்றுதிரண்டு, இந்த வர்த்தமானி அறிவித்தல் முற்றாக மீளப்பெறப்படுவதை வடக்கு, கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்த வேண்டும். ஒற்றுமை ஒற்றுமை என்று தேர்தலை மையப்படுத்தியே பேசாமல் இதுபோன்றமக்களுக்கானவிடயங்களில்தான் அவர் தமது ஒற்றுமையை நிலைநிறுத்தி உரிமைகளை வென்றெடுக்கவேண்டும். வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்படும் வரையில் தமிழ் கட்சிகள் தமது போராட்டத்தையும் கைவிடக்கூடாது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வர்த்தமானி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

"தமது உரித்து சம்பந்தமாக எவரும் உரிமை கோராதவிடத்து, அந்தக் காணி அரச காணி என்று கட்டாயம் பிரகடனம் செய்ய வேண்டுமென்று காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 5(1) கூறுகிறது. ஆகையால் குறித்த வர்த்தமானி மீளக் கைவாங்கப்பட்டால் மட்டுமே இந்த விடயம் தீர்க்கப்படலாம்" என்று அவர் 'காலைக்கதிர்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

வடக்கில் உள்ள 4 மாவட்டங்களிலும் கரையோரங்களில் உள்ள காணிகளின் உரித்துக்களை தனியார் 3 மாத காலத்திற்குள் வெளிப்படுத்துமாறு தெரிவித்து மார்ச் 28 ஆளும் தரப்பு 2430 வர்த்தமானி மூலம் அறிவித்தது. அதற்குத் தமிழ் அரசுக் கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. இந்த வர்த்தமானி அறிவித்தலைத் திரும்பப் பெறவில்லை என்றால், என்பிபி ஆளும் தரப்புக்கு எதிராகப் பெரும் போராட்டம் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார வடக்கிற்குள் நுழைய விடாமல் தடுப்போம் என்றும் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் அறிவித்திருந்தார்.

அனைத்துத் தமிழ்க் கட்சிகளினதும் பொது அமைப்புக்களினதும் ஆதரவுடன் இந்தப் போராட்டம் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. தமிழ்அரசுக்கட்சியின் இந்த நிலைப்பாட்டுக்கு ஆதரவாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் வர்த்தமானி திரும்பப் பெறப்படவேண்டும் இல்லையேல் போராடுவோம் என்று நிலைப்பாடு எடுத்து அறிவித்தது.

இந்தநிலையில்அரசின்2430வர்த்தமானி அறிவித்தல் மீது மேலதிக நடவடிக்கை எடுப்பது தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்படுவதாகக் காணி அமைச்சு மே 18 வெளியிட்ட அறிக்கை மூலம் மூலமாக காணி அமைச்சு அறிவித்தது. இது தொடர்பில் மே 23 நாடாளுமன்றத்தில் பிரதமர் ஹரினி தலைமையில் வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தப்படும் என்றும் நேற்று சபையில் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே இந்த வர்த்தமானி அறிவித்தலைத் திரும்பப் பெறுவது மட்டுமே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே வழி என்று தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

"காணிநிர்ணயகட்டளைச்சட்டத்தின்பிரிவு 4 இன் கீழ் 28.03.2025 வெளியிடப்பட்ட வர்த்தமானியின் தொடர் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக 18.05.2025 திகதியிட்ட கடிதம் மூலமாக காணி அமைச்சு அறிவித்துள்ளது. ஆனால், தமது உரித்து சம்பந்தமாக எவரும் உரிமை கோராதவிடத்து, அந்தக் காணி அரச காணி என்று கட்டாயம் பிரகடனம் செய்ய வேண்டுமென்று இச் சட்டத்தின் பிரிவு 5(1) கூறுகிறது. ஆகையால் குறித்த வர்த்தமானி மீளக் கைவாங்கப்பட்டால் மட்டுமே இந்த விடயம் தீர்க்கப்படலாம்" என்றார் அவர்.

## தமிழினப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் முறையான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. டுபாய் நாட்டில் தலைமறைவாகியுள்ள கஞ்சிப்பானை இம்ரானின் வழிநடத்தலுக்கு அமைய தேசபந்துவை கொலை செய்வதற்கு பூஸா சிறைச்சாலையில் உள்ள சுத்தா என்பவருடன் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதாக தொலைபேசி ஊடாகத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த விடயம் தொடர்பில் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிக்கையிடப்பட்டு, சுத்தா என்ற கைதியை விசாரணை செய்வதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு மின்னஞ்சல் ஊடாக உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் பிரதமர் அலுவலகம் முறைப்பாடளித்துள்ளது. ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து நாடுகளின் ஐ.பி. இலக்கத்துடன் தொடர்புடையதாக இந்த மின்னஞ்சல் முகவரி காணப்படுகிறது. இந்த மின்னஞ்சல்முகவரிதொடர்பானதகவல்களை உரிய நிறுவனத்திடம் கோரியுள்ளோம்.

எதிர்க்கட்சித் தலைவர் மீது ஸ்னைபர் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாகவும், லொக்கு பெடி என்பவர் இதனுடன் தொடர்புடையவர் என்றும் கடந்த வாரம் பொலிஸ் அவசர பிரிவுக்கு முறைப்பாடு ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த விடயம் குறித்தும் விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டது. ஒரு தரப்பினரை நெருக்கடிக்குள்ளாக்கும்வகையில்போலியான வகையில் இந்த தகவல் வழங்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

## இராணுவத்தினரை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருமய தலைமையகத்தில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புலிப் பிரிவினைவாதிகள் கோபித்துக் கொள்வர் என்ற அச்சத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேசிய போர் வீரர் நிகழ்வினை புறக்கணிப்பதற்கு திட்டமிட்டிருந்தார். எவ்வாறிருப்பினும் தேசப்பற்றாளர்களான நாட்டு மக்களின் எதிர்ப்பினையடுத்து விருப்பமின்றி ஜனாதிபதி அந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி உரையாற்றியபோது, இராணுவவீரர்கள் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கு முயற்சித்தார். இது மணமகள் இன்றி திருமணத்தை நடத்துவதைப் போன்றதாகும். இராணுவ வீரர்களை கௌரவிப்பதே இந்த நிகழ்வின் நோக்கமாகும். ஆனால் ஜனாதிபதி இராணுவ வீரர்களை இராணுவ சிப்பாய்கள் என்றே விளித்தார்.

இராணுத்தினர் அனைவரும் சிப்பாய் என்ற போதிலும், அனைத்து சிப்பாய்களும் இராணுவவீரர்கள் அல்லர். போரில் நேரடியாகப் பங்கெடுத்தவர்களே இராணுவ வீரர்களாவர். போரின்போது போர்க் களத்திற்குச் சென்று போராடியவர்களே இராணுவ வீரர்களாவர். ஆனால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சகலரையும் சிப்பாய்கள் என அழைத்து அவர்களை அவமதித்திருக்கின்றார்.

போர் அபாயம் மிக்கது. பேரழிவானது. மீண்டும் போர் இடம்பெறாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். இராணுவத்தினரால் தான் போர் ஏற்பட்டது என்பதைப் போலவே ஜனாதிபதியின் உரை அமைந்திருந்தது. போரின் அபாயத்தை இராணுவத்தினருக்கு புதிதாகக் கற்பிக்க வேண்டியதில்லை. அமைதியின் மதிப்பை அறிந்ததால்தான் இராணுவத்தினர் தமது உயிரை தியாகம் செய்து அதில் வெற்றி கண்டனர்.

ஆனால் புலி பயங்கரவாதிகளுக்கு அது தெரியாது. அமைதியின் மதிப்பையும், போரின் பேரழிவையும் அறிந்திருக்காததன் காரணமாகவே அவர்கள் போரை ஆரம்பித்தனர். இராணுவத்தினர் முன்னிலையில் ஆற்றிய உரையை ஜனாதிபதி பயங்கரவாதிகளின் முன்னிலையிலேயே ஆற்றியிருக்கவேண்டும். எனவே பிரிவினைவாதத்தையும் இனவாதத்தை தூண்டிய தற்போது உங்களின் நெருங்கிய நண்பர்களாகவுள்ள கனேடிய தமிழ் காங்ரஸ் மற்றும் உலக தமிழ் பேரவையின் தலைவர் முன்னிலையில் சென்று இவ்வாறு உரையாற்றுங்கள் என ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# மக்கள் பற்றிய சிந்தனையின்றி வாக்கு பெறுவதே புளொட் தலைமைகளின் குறிக்கோளாக உள்ளது

## முன்னாள் மாகாணசபை உறுப்பினர் லிங்கநாதன் குற்றச்சாட்டு

தமிழீழமக்கள்விடுதலைகழகத்தின்தலைமையானது தங்கள் அரசியல் சுயலாபத்திற்காக மக்களை பற்றிய சிந்தனையற்றவர்களாக வாக்குகளை மாத்திரம் குறிக்கோளாக கொண்டு வீட்டு சின்னம், குத்து விளக்கு சின்னம் மற்றும் சங்கு சின்னம் என காலத்திற்கு ஏற்றவகையில் மாறிக்கொண்டு தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தினையும் அதன் அரசியல் சித்தாந்தத்தினையும் நீர்த்துபோகச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என தெரிவித்துள்ள கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் வவுனியா நகரசபை தலைவரும் முன்னாள் வடமாகாண சபை உறப்பினருமான ஜி. ரி. லிங்கநாதன் அக்கட்சியின் அனைத்து செயற்பாட்டில் இருந்தும் விலகுவதாக கட்சி செயலாளருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கீழ்வரும் காரணங்களை மையமாக வைத்து தமிழீழ மக்கள் விடுதலை கழகம் மற்றும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி அமைப்புக்களிலிருந்தும் அவ்வமைப்புக்களின் செயற்பாடுகளிலிருந்தும் விலகிக் கொள்கின்றேன்.

கழகத்தின் சொந்த அரசியல் போக்குகளில் இயங்கிக் கொண்டிருந்த முன்னணி தோழர்கள் வாக்கு அரசியலில் ஈடுபாடு காட்டத் தொடங்கியதன் பின்னர் அதுவரை கொண்டிருந்த தார்மீகங்களையும், தத்துவங்களையும் கைவிட்டு ஈழப்பிரச்சனையை தங்கள் சுயநலன்களுக்காக பாவிக்க ஆரம்பித்தனர்.

அதன் தொடர்ச்சியாக தமிழீழ மக்கள் விடுதலை கழகம் சார்ந்த எமது தோழர்கள் கடந்த காலங்களில் படுகொலை செய்யப்பட்டிருந்த நிலையில், அவர்களுடைய கொலைகள் தொடர்பாக கழகமானது ஒரு விசாரணைக் குழுவை நியமித்திருந்த போதும், அவ்விசாரணைக் குழுவானது பின்னர் கலைக்கப்பட்டதாக அறிந்துகொண்டேன்.

எமது தோழர்கள் ஏன் கொல்லப்பட்டார்கள் என்ற உண்மையை அறிந்துகொள்ள முடியாமல் போனதுடன் கழகத்தின் தலைமைக்குழு உறுப்பினர்களிடமிருந்து எனது கேள்விகளுக்கான பதில்கள் கிடைக்காத காரணத்தால் நான் மிகவும் கவலையடைந்துள்ளேன்.

கழகத்தின் தலைவர்கள் பேசிய ஜனநாயகம், இடது அரசியல், நுண்ணரசியல் போன்ற அறிவுச் செயற்பாடுகள் எல்லாம் காணாமல் போய் அவர்கள் வெறும் உணர்வுகளால் இயக்கப்பட்டார்கள். இதன் காரணமாக கழகத்தில் கேள்வி கேட்ட என்னைப் போன்ற தோழர்கள் ஒதுக்கப்பட்டார்கள்.

அத்துடன் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் சொத்துக்கள் கடந்த 26 ஆண்டுகளாக கழகத்தின் முன்ணணிஉறுப்பினர்களால்முறையற்ற விதத்தில் தனிப்பட்ட ரீதியில் கையகப்படுத்தி விற்பனை செய்யப் பட்டுள்ளது.

மக்களின் பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கணக்கறிக்கைகளோ ஆவணங்களோ அமைப்பில் இல்லை. சொத்துக்களும் இல்லை. இதற்கான பதிலும் கழகத்தின் முன்னணி தோழர்களால் வழங்கப்படாத காரணத்தால்தொடர்ந்தும்கழகத்தில் பயணிப்பதற்கு எனது சுயகௌரவம் இடங்கொடுக்கவில்லை.

கடந்த காலத்தில் தமிழீழ மக்கள் விடுதலை கழகமானது ஜனநாயகநீரோட்டத்தில்இணைந்து கொண்டதன் பின்னர் நங்கூரம் சின்னத்தில் போட்டியிட்டு 1994 ஆம் ஆண்டு மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்றிருந்தது. அத்துடன் வவுனியா நகரசபை, சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேசசபை, பருத்தித்துறை நகரசபை ஆகியவற்றை தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் நங்கூரம் சின்னத்தில் கைப்பற்றியிருந்தது.

யாழ்ப்பாணம் மாநகரசபையில் அதே ஆண்டு எதிர்க்கட்சியாக மாணிக்கதாசன் தலைமையில் கழகம் தனது பங்களிப்பை வழங்கியிருந்தது. அதனைத் தொடர்ந்து வவுனியா நகரசபை தலைவராக தெரிவு செய்யப்பட்டு எனது தலைமையில் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தது.

இருந்தபோதும் கழகத்தின் முன்ணணி தலைவர்கள் தங்கள் அரசியல் சுயலாபத்திற்காக மக்களைபற்றிய சிந்தனையற்றவர்களாக வாக்குகளை மாத்திரம் குறிக்கோளாக கொண்டு வீட்டு சின்னம், குத்து விளக்கு சின்னம் மற்றும் சங்கு சின்னம் என காலத்திற்கு ஏற்றவகையில் மாறிக்கொண்டு தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தினையும் அதன் அரசியல் சித்தாந்தத்தினையும் நீர்த்துபோகச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மிதவாத தமிழ் தேசிய அரசியல்வாதிகளின் வெற்று உணர்ச்சி அரசியலானது ஈழத்தமிழருக்கான எதையும் அரசியல்களத்தில் சாதிக்க வல்லமையற்றது என தெரிந்து குறுந்தேசிய அரசியலிலிருந்து விலக ஆரம்பித்துள்ளேன்.

எதிர்காலத்தில் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் ஸ்தாபகரும், செயலதிபர் க.உமாமகேஸ்வரன் மற்றும் புதியபாதை சுந்தரம் ஆகியோரின் பொது உடைமைவாத சிந்தனைக்கு அமைவாக கழகம் இயங்கினால் நான் தொடர்ந்து பயணிப்பேன், ஆனால் தற்சமயம் இருக்கும் தலைமையானது தானாக ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்பதுடன் தற்போது இருக்கும் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைமையை நான் நிராகரிக்கிறேன்.

எனது இந்த நிலைப்பாடானது, சில தோழர்களுக்கு கசப்பானதாக இருக்கலாம்! என் மீது அவதூறுகள் அள்ளி வீசப்படலாம். நான் ஒரு போராளியாக எனது வாழ்க்கையை மக்களுக்காக அர்ப்பணித்தேன் என்பதே உண்மை, அதனால் ஒரு போதும் நான் கலங்கி நிற்கப்போவதுமில்லை, என் தேசத்தை விட்டு ஓடப்போவதுமில்லை. என்னை நம்பியுள்ள தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் உண்மையாக பொதுவுடைமை அரசியல் சித்தாந்தத்தில் பயணிப்பேன் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

100

# கல்வி அமைச்சு செயலர் கல்முனைக்கு வருகை

## சாதனை மாணவர்கள் கௌரவிப்பு

(நூருல் ஹுதா உமர்)



கல்முனைவலயஅதிபர்களுடான சந்திப்பு கல்முனை கல்வி வலய பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதூல் நஜீம் தலைமையில் கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலை மண்டபத்தில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின்செயலாளர்க.குணநாதன் பங்கேற்புடன் நடைபெற்றது.

கிழக்குமாகாணகல்விஅமைச்சின் செயலாளர் கே.குணநாதன், மாணவர்களின் கல்வி மேம்பாடு, பாடசாலைநிர்வாகம்,மாணவர்கள்ஒழுக்கம்என்பவற்றிலும்,ஆசிரியர்களிடமிருந்து பாடசாலை உச்ச பயனை பெறுவதிலும் அதிபர்களின் வகிபாகம் தொடர்பில் இதன்போது வலியுறுத்தினார்.

மேலும், மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சரியான வழிகாட்டல்களை அதிபர்கள் செய்ய வேண்டியது மிக அவசியம் என்று வலியுறுத்தினார்.

மாணவர்களுக்கு கிடைக்கும் பயனை உரிய நேரத்தில் பெற்றுக் கொடுப்பதன் அவசியத்தைக் குறிப்பிட்டு அரசு அளிக்கும் நிதி உதவியை மாணவர்களுக்கு அதிபர்கள் பெற்றுக் கொடுப்பதில் பின் நிற்கக்கூடாது என வலயக் கல்வி பணிப்பாளர் தெரிவித்தார்.

அத்துடன் இறுதியாக வெளியான க.பொ.த உயர்தரத்தில் மாவட்ட மட்டத்தில் மருத்துவ துறையில் முதலிடம் பெற்ற மாணவனையும், பொறியியல் துறையில் முதலிடம் பெற்ற மாணவனுக்கும் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. மேலும் பௌதீக வளம் குறைந்த மூன்று பாடசாலைகளுக்கு மடிக் கணினி வழங்கப்பட்டதுடன் இருபது மாணவர்களுக்கு அவர்களின் கல்விச் செலவுக்காக காசோலையும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிமனை பிரதி கல்வி பணிப்பாளர் கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், அதிகாரிகள், அதிபர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.-



# நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக்குழு உறுப்பினராக நிசாம் காரியப்பர் நியமனம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

விஞ்ஞானம் மற்றும் டிஜிற்றல் தொழில்நுட்பம் தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழு உறுப்பினராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் தொடர்பான அறிவிப்பை சபாநாயகர் நேற்று (செவ்வாய்க்கிழமை) சபை அமர்வின்போது வெளியிட்டார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அபவாதம் பேசும் அநுரவே உண்மையான இனவாதி

அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க 16ஆவது தேசிய வீரர்கள் தினத்தின்போது வலியுறுத்திய முக்கியக் கருத்துகளில் ஒன்று, 'வடக்கிலும் தெற்கிலும் இனவாதம் மீண்டும் தலைதூக்கியிருக்கிறது' என்ற ஆழமான குற்றச்சாட்டு. இவரது இந்தக் கூற்றில் தெற்கில் சிங்கள இனவாதத்தின் மீள்பிறப்பை நோக்கி விரல் சுட்டுவது வரவேற்கத்தக்கதாக இருக்கலாம். ஆனால் அதேச் சமயத்தில், வடக்கிலிருந்து எழும் தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளை இனவாதமாகப் பார்க்கும் வாக்குமூலம், ஆழ்ந்த கவலையைத் தோற்றுவிக்கிறது. அரசுத் தலைவரின் அபவாதத்தைக் குறித்து நிற்கின்றது.

வடக்கு மக்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் 'சமத்துவம், நியாயமான பங்கீடுகள், அரசியல் தன்னாட்சி, மற்றும் கலாசார மரபுகளின் பாதுகாப்பு ' அனைத்தும் ஒரு ஜனநாயக நாட்டில் உரிய இடத்திற்குரியவை. இவை எந்தவொரு வகையிலும் இனவாதத்தின் வெளிப்பாடாக இருக்கமுடியாது. இதுவரை தமிழர்கள் எதிர்கொண்ட நிலைகள், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒடுக்கல், புறக்கணிப்பு, அழிவூட்டும் போக்குகள் என்பவையாகவே இருந்துள்ளன. இந்நிலையில் அவர்களது உரிமைக்குரலை இனவாதம் என்று பாவனையோடு திரிப்பது, உண்மையை மாற்றிக்கூறும் ஆபத்தான அரசியல் நடவடிக்கையாகும்.

2019இல் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் பெரும்பான்மையைக்கொண்ட பிரதேசங்களில்தன்னுடைய தேசிய மக்கள் சக்திக்குத் (என்பிபி), ஏனைய தமிழ் கட்சிகள் அனைத்துக்குமான வாக்குகளோடு ஒப்பிடும்போது ஆதரவு குறைவாகஇருந்தாலும்கூட, அதனைஜனநாயகவிருப்பத்தின் வெளிப்பாடாக ஏற்றுக்கொண்ட அரசுத் தலைவரே, தற்போது உள்ளூராட்சி தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்கு 'இனவாத சூழ்நிலைதான் காரணம்' என்று கூறுவது, அவரது அரசியல் தகுதியற்ற மனநிலையை உணர்த்துகிறது. வெற்றியில் தம்மை மக்கள் விரும்பியவர்கள் எனக் கூறுபவர்கள், தோல்வியில் மக்களையே குற்றம்சுமத்துவது நியாயமற்ற அரசியல் நடத்தை ஆகும்.

இனவாதம்என்பது, ஒருவரது இனஅடையாளத்தின்பேரில் மற்ற இனங்களைத் தாழ்வாகவே பார்க்கும், அவர்களின் உரிமைகளை மறுக்கும், அல்லது அவர்களைக் ஒடுக்கும் நோக்கத்தில் செயல்படும் கொடூரமான அரசியல். ஆனால் தமிழ் மக்களின் உரிமை வலியுறுத்தும் பேச்சுக்கள், தேர்தல் முடிவுகள், அல்லது உரிமைக்கான அரசியல் குரல்கள் இவைகளில் எதுவும் இனவாதத்தின் வரம்பிற்குள் வராது. அவற்றால் இலங்கையில் வாழும் சிங்களவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. அப்படியிருக்கும்போது தமிழர்களின் அரசியல் விருப்புக்களை இனவாதம் என்பது, அரசுத் தலைவரின் இனவாதத்தையே வெளிப்படுத்துகின்றது.

மாற்றமாக, இந்தக் கூற்றுகள் அரசுத் தலைவருக்கே எதிரான சாட்சியமாக அமைகின்றன. அவர் இனவாதம் தலைதூக்கியிருக்கிறதுஎனச்சொல்வதுஉண்மைஎன்றால், அதற்குப் பெரும் பங்கு தற்போது செயலில் உள்ள அவரது ஆளும்தரப்பிற்கே உள்ளது. உள்நாட்டு பௌத்த சிங்கள மேலாண்மைவாதம், தமிழ் மக்கள்மீது தொடர்ந்து சந்தேகம் வைப்பது, அவர்களது மக்களாட்சிசார் முயற்சிகளை வன்முறையோடு ஒடுக்க முயல்வது, அச்சுறுத்தல் மற்றும் தடைகளால் அவர்களை அரசியலிலிருந்து விலக்கிச் செய்யும் முயற்சிகள் – இவைதான் உண்மையான இனவாதத் தன்மைகள்.

இவ்வாறு, வடக்கிலும் தெற்கிலும் இனவாதம் உள்ளது என்ற பொதுப்படையான கூற்றுக்குள், உண்மையானப் பிரச்சினைகளை மறைத்துவிட்டு, அரசின் செயலிழப்புகளையும் மக்கள் நம்பிக்கையின்மையையும் மூடிவைக்க முடியும் என்று எண்ணப்படலாம். ஆனால் அந்த எண்ணம் தவறானது. ஜனநாயகத்தை மதிக்கும் அரசியல்வாதி ஒருவருக்கு, மக்கள் வழங்கும் எதிர்மறை பதில்களும், அவரது சிந்தனைகள் எங்கு தவறுகின்றன என்பதை உணர்த்தும் நாணயமாக இருக்கவேண்டும்.

அதனைவிட, மக்களின் குரலை ஒடுக்கும் நோக்குடன் இனவாதத்தின் முத்திரையை திரிக்க நினைத்தால், அது மத்திய அதிகாரத்திற்கே கேடாக முடியும். ஒரு புதிய ஜனநாயக போக்கை வாக்குறுதி அளித்தவராகிய அரசுத் தலைவருக்கு இது சாத்தியமற்ற, கவலையூட்டும் திசையாகவே இருக்கும். உண்மையான தேசிய ஒற்றுமை, ஒவ்வொரு இனத்தினதும் உரிமைகளை மதிப்பதிலும், அவர்களின் குரலுக்கு உரிய இடம் வழங்குவதிலும்தான் இருக்கிறது ஒடுக்குவதிலும், அவமதிப்பதிலும் அல்ல.

## நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை திருத்தப் பணியால் முக்கியமான வீதிகள் குண்டும், குழியுமாக காட்சியளிப்பு

### அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கக் கோரும் மக்கள்

(நூருல் ஹுதா உமர்)

பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மாளிகைக்காடு மீன் சந்தைக்கு செல்லும் மாளிகா வீதியின் மாளிகா சந்தி, கல்முனை மாநகரத்தில் அதிக சனத்தொகை நடமாட்டமுள்ள வீதிகளில் ஒன்றான வைத்தியசாலை வீதி போன்ற முக்கியமான வீதிகளில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை திருத்தப் பணிகளை செய்து முடிதத பின்னர் வீதிகளை முறையாக செப்பனிடாமல் சென்றதால் அப்பிரதேச மக்களும், பாதசாரிகளும் பலத்த அசௌகரியங்களை தினம் தினம் எதிர்நோக்கி வருகிறார்கள்.





குறித்த வீதிகளை முறையாக செப்பனிட பொதுமக்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகள், ஊழியர்களை அந்தந்த சந்தர்ப்பங்களில் கேட்டுக்கொண்ட போதிலும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்து வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள். இந்த வீதிகளில் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரதிநிதிகள், அரச உயர் அதிகாரிகளின் வீடு, அலுவலகம், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் என்பனவும் அமைந்துள்ளன.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான இந்த வீதிகளை கடந்த காலங்களில் இருந்த அரசாங்கங்கள் காபட் வீதியாக சீரமைத்து மக்கள் பாவனைக்கு வழங்கியிருந்த போதிலும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் இவ்வாறான பொடுபோக்கான செயல்களால் மழைகாலங்களில் பொதுமக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. வடிகான்கள் கூட மண்களால் நிரப்பப்பட்டு வெள்ள நீர் வடிந்தோட முடியாத நிலையும் சில இடங்களில் உள்ளதை காணமுடிகிறது.

இந்த விடயத்தில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை உரிய அதிகாரிகள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகள் துரிதகதியில் கவனம் செலுத்தி வீதிகளை மக்கள் பாவனைக்கு உகந்த வகையில் திருத்தி அமைத்து தருமாறு மக்கள்

## தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் மாபெரும் தொழிற் சந்தை நிகழ்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் தொழிற் சந்தை ஒன்று இம் மாதம் 28 ஆம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரை இடம் பெறவுள்ளதாக பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த தொழிற் சந்தையானது மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களமும் தம்பலகாமம்பிரதேசசெயலகமும்இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. இதில் தனியார் நிறுவனங்களை சேர்ந்த பல நிறுவனங்கள் கலந்து கொள்ளவுள்ளன. அன்றைய தினம் கல்வி தகைமை தங்களது தொழில்சார் சான்றிதழ்களுடன் வருகை தந்து வேலை வாய்ப்புக்களை பெறுவதற்கான வாய்ப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வரணி பிரதேச வைத்தியசாலைக்கு ரஜீவன் எம்.பி. கண்காணிப்பு வருகை

(சுபேசன்)

தென்மராட்சி - வரணி பிரதேச வைத்தியசாலைக்கு கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.





வைத்தியசாலையில் நிலவுகின்ற தேவைப்பாடுகள் தொடர்பாக பிரதேச மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்த நிலையில் அவர் மேற்படி விஜயத்தை முன்னெடுத்திருந்தார்.

இதன்போது வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் பொதுமக்களோடு வைத்தியசாலையின் தற்போதைய நிலவரம் மற்றும் தேவைப்பாடுகள் குறித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உண்ணாரட்ட சிறைச் சட்டத்தை திருத்த அமைச்சரவை அனுமதி

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2025.04.01 அன்று தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் வரி வீதம் 5மூ சதவீதம் தொடக்கம் 10மூ சதவீதம் வரை அதிகரிப்பதற்கான சட்டரீதியான ஏற்பாடுகள் 2025 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வரி அறவிடப்படுகின்ற வருடாந்த வருமான எல்லையான 1.8 மில்லியன் ரூபாய்களை விஞ்சாத வருமானத்தைக் கொண்ட நபர்களின் தக்க வைக்கப்பட்ட வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், அவ்வாறான வைப்பாளர்கள் மற்றும் குறைந்த வருமானங் கொண்டவர்கள் சிரமங்களுக்கு உள்ளாவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த பிரச்சினைக்கான தீர்வாக வரி விடுப்புக்குக் குறைவான வருமானத்தைத் கொண்டுள்ள நபர்களுக்கு சுயபிரகடனத்தைச் சமர்ப்பிக்கின்ற முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, வட்டி மீதான தக்க வைக்கப்பட்ட வரியை அறவிடுவதிலிருந்து விடுவிப்பதற்கு 1.8 மில்லியன் ரூபாய்களைவிஞ்சாதமதிப்பீட்டு வருமானத்துடன்கூடியஅனைத்து நிலையான வைப்பாளர்களுக்கு சுயபிரகடனத்தை அறிமுகப் படுத்துவதற்கும்மற்றும்அனைத்து வகையானவங்கிக்கணக்குகளையும் திறப்பதற்காக வரி அறிமுக இலக்கத்தை (வுஐஹி) சமர்ப்பிப்பதற்குக்கட்டாயமாக்கும் தகுந்த திருத்தத்தை உள்வாங்கி 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கஉண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான திருத்தம் செய்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# அதிபரின் வீட்டுக்கு தீ வைக்க முயற்சி

(றிபாஸ்).

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அமைந்துள்ள அதிபர் அன்வர் நௌசாத்தின் வீட்டுக்கு நள்ளிரவில் தீ வைப்பதற்கு முயற்சிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்வர் நௌசாத்தின் வீட்டு வழவுக்குள் புகுந்தவர்கள் வீட்டின் முன் பகுதியில் தீ வைப்பதற்காக பல இடங்களில் பெற்றோல் ஊற்றியுள்ளனர். இதன்போது சத்தம் கேட்பதை உணர்ந்து தான் வெளியில் வந்து பார்த்ததாகவும் பெற்றோல்ஊற்றியவர்கள்தப்பித்து ஓடியதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் தப்பித்து ஓடியவர்கள் கற்களை வீசி தாக்கியதாகவும் அதனை அடுத்து பொலிஸ் அவசர இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு நடந்த சம்பவங்கள் பற்றி முறையிட்டுள்ளதாகவும் அதன் பின்னர் பொலிஸார் தனது வீட்டுக்கு வந்து களத் தகவல்களை பெற்றுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக சில அரசியல்வாதிகள் தன்னை பற்றி தொடர்ச்சியாக பொய்யான தகவல்களை பரப்பி வருவதாகவும், நடந்த சம்பவத்திற்கும் அதற்கும் தொடர்புகள் இருக்கலாமெனவும் அன்வர் நௌசாத் மேலும் தெரிவித்துள்ளார்.

# குற்றவியல் சட்டத்திற்கு உயர் நீதிமன்றம் அனுமதி

அரசமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட 'குற்றவியல் நடவடிக்கைமுறைச்சட்டக்கோவை (திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன நேற்று நாடாளுமன்றத்திற்கு அறிவித்தார்.

அதற்கமைய, முன்வைக்கப்பட்ட விடயங்களைப் பரிசீலித்த பின்னர், சட்டமூலத்தின் எந்தவொரு ஏற்பாடும் அரசமைப்பிற்கு முரணானது எனத் தீர்மானிப்பதற்கு எந்த அடிப்படையும் இல்லை என உயர் நீதிமன்றம் கருதுவதாக உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளதுடன் அதன்படி, மனுதாரர் இந்த மனுவை மீளப் பெறுவதாக நீதிமன்றத்திற்குத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, மனுவை மீளப்பெறுவதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்து, மனு தொடர்பான எதிர்வரும் நடவடிக்கைகளை முடிவுறுத்தி அதனைத் தள்ளுபடி செய்துள்ளதாக சபாநாயகர் அறிவித்தார்.

# ரம்புக்வெலவின் மகனும் சந்தேகநபராக்கப்பட்டார்

ஊழல் குற்றச்சாட்டின் கீழ் மூன்று முறைப்பாடுகள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை ஜூன் 3 வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், கெஹெலிய ரம்புக்வெல்லவின் மகன் ரமித் ரம்புக்வெல்லவை குறித்த குற்றச்சாட்டில் சந்தேகநபராகப் பெயரிட கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களை பரிசீலித்த பின்னர் நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.



# அமைச்சர் சந்திரசேகரன் அர்ச்சுனா எம்.பி. தர்க்கம்

கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகருக்கும், யாழ் மாவட்ட சுயேச்சை குழுவின் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் நிலவியது. இருவரும் ஒருவருக்கு கொருவர் கடுமையாக சாடிக்கொண்டனர்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உற்பத்திவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றிய சுயேச்சைக்குழுவின் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, ஆளும் தரப்பில் உள்ள வடக்கு மாகாணத்தின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினஷர்களின் வாய்களை மூடுமாறு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை கேட்கின்றேன். அவ்வாறு செய்தால் நீங்கள் அங்கே வெற்றிபெறுவீர்கள். ஒருவருக்கு உள்ளாடைக்கு எவ்வாறு கூறுவார்கள் என்பதுகூடத் தெரியாமல் இருக்கிறது. சரியான தமிழ் தெரியாது எப்படி இவர் வடக்கிற்கு வந்து மக்களுக்கு உதவி செய்யப் போகின்றார்? ஜட்டி என்றால் உள்ளாடையாகும். படகை நிறுத்த ஜட்டியை செய்வதாக கூறுவதாக கூறுகின்றார்.

புனரமைப்புக்கும் புணர்வுக்கும் வித்தியாசம் தெரியாதவராக இருக்கின்றார். இதனால் ஆளும்தரப்பிற்கு ஒன்றையே கூறுகின்றேன். இவர்கள் இருவரின் வாய்களை மூடி அந்த இடத்திற்கு வேறு யாரையாவது நியமித்து அபிவிருத்தி குழு கூட்டங்களுக்கு வேறு யாரைவாது அனுப்புங்கள். இல்லையென்றால் தேசிய மக்கள் சக்தியின் பெயரை இல்லாமல் செய்வேன் - என்றார்.

இவ்வேளையில் ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து எழுந்த கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர், இவர் எனது பெயரை பயன்படுத்தி பச்சைப் பொய்களை கூறுகின்றார். ஜட்டியா? ஜெட்டியா? என்று இப்போது இவர் ஜட்டியை தூக்கி தலையில் போட்டுக்கொண்டு அது நாற்றமடிக்கின்றது என்று சத்தமிட்டுக்கொண்டு போகின்றார். அவர் மொழியை கொச்சைப்படுத்துவதுடன், மலையக மக்களையும் கொச்சப்படுத்துகின்றார். அதுமன்றி பெண்களை கொச்சப்படுத்தும் ஒரு நபர்தான் அருச்சுனா. இதனால் அவர் பிரதேச சபை தேர்தலில் ஒரு உறுப்பினரைக் கூடப் பெற்றுக்கொள்ளவில்லை. வக்கில்லாத கூத்தாடி,

இவர் பெரிய கூத்தாடி மாத்திரமல்ல வெளிநாட்டில் இருக்கின்ற எல்லோரும் இவரை கழுவிக் கழுவி ஊற்றுகின்றார். இவர் காசு வாங்கும் வசூல் மன்னன். தேர்தலின்போது வெளிநாட்டு மக்களின் காசுகளைச் சுரண்டி, ஏமாற்றிய வசூல் மன்னன் என்று கடுமையாக சாடினார்.

இவ்வேளையில் ஒழுங்கு பிரச்சினையை எழுப்பி எழுந்த அர்ச்சுணா, புலம்பெயர் தமிழர்கள் எனக்கு கோடிக் கணக்கில் பணம் தந்தனர். நான் மக்களுக்காக பணியாற்றுகின்றேன். நான் வைத்தியர் பணியையும் கைவிட்டு, வைத்தியசாலை பணிப்பாளர் பதவியையும் கைவிட்டு இங்கு வந்தது அரசியல் செய்யவே - என்றார்.

# காணிப் பிரச்சினைத் தீர்வுக்காகவே அரசுடமையாக்கல் வர்த்தமானியாம்

## அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

வடக்கு, கிழக்கில் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு உரியவர்களுக்குக் காணி உரித்துக்களை வழங்குவதற்கே ஆளும்தரப்பு முயற்சிக்கின்றதே தவிர, அங்குள்ள காணிகளை எந்த வகையிலும் கையகப்படுத்துவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்காது. வர்த்தமானியை நிறுத்தினால் வடக்கு மக்களுக்கு காணி பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதில் தாமதம் ஏற்படும் என விவசாயம், கால்நடைகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் லால் காந்த தெரிவித்தார்.

காணி தொடர்பில் ஆளும்தரப்பினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலொன்று தொடர்பாக மே 8 அன்று இலங்கை தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் நிலையியல் கட்டளை 23/2 இன் கீழ் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு நேற்று அமைச்சர் பதிலளித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தனது கேள்வியில், மார்ச் 28 வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களை மையப்படுத்திய வகையில் அங்குள்ள பெருமளவான ஏக்கர் காணிகளை அளவீடு செய்யவும், அந்த காணிகளின் உரிமையாளர்களை பதிவு செய்யுமாறும் இல்லையேல் அந்த காணிகளை கையகப்படுத்துவது தொடர்பாகவும் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அதனை மீளப் பெறுவீர்களா? என்று தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அமைச்சர் லால்காந்த தொடர்ந்து தெரிவித்ததாவது:

காணிகளைக் கையகப்படுத்துவதற்காக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை. காணித் தீர்வுக்கான திணைக்களத்தால் காணி தீர்த்தல் தொடர்பன வர்த்தமானியே வெளியிடப்பட்டுள்ளது. ஒருபோதும் காணிகளை கையகப்படுத்துவதற்கான வர்த்தமானி வெளியிடப்படவில்லை.

வடக்கு, கிழக்கு மக்களுக்குப் போர் காரணமாக காணிப் பிரச்சினைகள் ஏற்பட்டதால் அந்த காணிப் பிரச்சினைகளை தீர்க்க வேண்டியிருந்தது. குறிப்பாக மற்றைய மாகாணங்களில் நூறு சதவீதமும், 98 சதவீதமும் காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ள நிலையில் வடக்கில் 30.36 சதவீதமே தீர்க்கப்பட்டுள்ளன. கிழக்கில் 87.4 சதவீதமே தீர்க்கப்பட்டுள்ளன.

போர் மற்றும் பல்வேறு காரணங்களால் சிலர் வெளிநாடு சென்றுள்ளதாலும், மேலும் சிலர் வேறு இடங்களில் இருப்பதாலும் ஆவணங்கள் காணாமல் போயிருக்கலாம். ஆனால் ஒருபோதும் காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கை இடம்பெறவில்லை. தமக்கு முடிந்த வரையில் எந்த முறையிலாவது தமது காணிகளை உறுதிப்படுத்தக்கூடியவர்களுக்கு உரித்துக்களை வழங்குவதே இதன் நோக்கமாகும். பிரதமரின் தலைமையில் மே 23 நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது. இதன்போது நீங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை ஆராயவும் தயார். ஆனால் காணிகள் கையகப்படுத்தப்படாது. இது நாடு முழுவதும் முன்னெடுக்கும் சாதாரண செயற்பாடாகும்.

இது தொடர்பில் ஏற்பட்ட நெருக்கடிகளால் தீர்வு காண முடியாது போகிறது. இதற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். நீங்கள் இந்த வர்த்தமானியை நிறுத்தினால் வடக்கு மக்களின் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதிலேயே தாமதம் ஏற்படும் - என்றார்.

# உப்பு இறக்குமதிக்கு மீண்டும் அனுமதி

உப்பு இறக்குமதிக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி வரை உப்பு இறக்குமதி செய்வதற்கான அனுமதியை வழங்கும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக இறக்குமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் உபுல்மலீ பிரேமதிலக்க தெரிவித்தார்.

உப்பு இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் தேவையில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அனுமதி பெற்ற எந்தவொரு இறக்குமதியாளருக்கும் உப்பை இறக்குமதி செய்வதற்கு முடியும் என உபுல்மலீ பிரேமதிலக்க கூறினார்.

அத்துடன் அயடீன் கலக்காத மற்றும் அயடீன் கலந்த உப்பை இறக்குமதி செய்ய முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

உணவுக்கு பயன்படுத்தப்படும் 250 மெற்றிக் தொன் மேசை உப்பு இன்று (20) நாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளதாக வரத்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார். 10 உப்பு கொள்கலன்கள் நேற்று நாட்டிற்கு கொண்டுவரப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.




# போலி முகநூல் கணக்குகள்: அமெ. தூதரகம் அவதானம்

அமெரிக்கத் தூதரக அதிகாரிகளின் சமூக ஊடகக் கணக்குகளைப் போன்று ஆள்மாறாட்டம் செய்யும் போலியான சமூக ஊடகக் கணக்குகள் சமீபத்தில் அதிகரித்து வருவதை இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அவதானித்துள்ளது.

ஆள்மாறாட்டம் செய்பவர்களின் சமூக ஊடகக் கணக்குகளுடன் தொடர்பாடல்களை, ஊடாட்டங்களை மேற்கொள்வதை அல்லது அவற்றினூடாக வழங்கப்படும் தகவல்களை நம்புவதைத் தவிர்த்து, அமெரிக்கத் தூதரகத்தையோ அல்லது அதன் அதிகாரிகளையோ பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் எந்தவொரு கணக்கினதும் நம்பகத்தன்மையினை ஆராய்ந்து உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு சமூக ஊடகங்களைப் பயன்படுத்துபவர்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம் என்று தூதரகம் தெரிவித்துள்ளது.

எமது தூதரகத்தின் மிகவும் துல்லியமான மற்றும் மிகவும் புதுப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு, போலிகளைத் தவிர்த்து, நேரடியாக எமது மூலாதாரங்களை நாடவும். எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தினைப் பார்வையிடுவதுடன், எமது தூதரகத்தின் உறுதிப்படுத்தப்பட்ட சமூக ஊடகக் கணக்குகளை மாத்திரம் பின்தொடரவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெங்கு பரவும் சூழல் காணப்படுவதால் பிரதேச செயலகம் மீது குற்றச்சாட்டு

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் டெங்கு நோய் பரவுவதற்கு காரணமாக இருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக நுழைவாயிலில் இருக்கும் பாதுகாப்பற்ற குப்பை தொட்டியில் உத்தியோகத்தர்கள் குப்பைகளை வீசி செல்வதால் மாடுகள் நாய்கள் அந்த குப்பைத் தொட்டியை அலங்கோலம் செய்து வருகின்றன.

கடந்த இரண்டு நாள்களாக விடுமுறை நாள் என்பதால் திங்கட்கிழமை பணிக்கு வந்த அரச உத்தியோகத்தர்கள் குறித்த குப்பையை கண்டும் காணாமலும் விட்டுச் சென்றுள்ளனர்

பிரதேச செயலகம் அமைந்திருக்கின்ற பகுதியில் வைத்தியசாலை, உணவகம், பொலிஸ் நிலையம் ,சமுர்த்தி நிலையம் ,வங்கி, பிரதேசசபை போன்றன





காணப்படுவதால் அதிகளவான மக்கள் குறித்த இடத்திற்கு அடிக்கடி வந்து போகிறார்கள்.

குறித்த குப்பையில் இருந்து துர்நாற்றம் வீசி வருவதால் நாய்கள் குப்பையை கிண்டி வருகின்றன.

தமது அலுவலகத்திற்கு முன்னால் காணப்படும் குப்பையை சுத்தம் செய்ய முடியாத அரச உத்தியோகத்தர்கள் எவ்வாறு சமூக அக்கறையுடன் சேவை செய்வார்கள் என்று அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

113

# வவுனியா மேல் நீதிமன்றத்தினால் கஞ்சா உள்ளிட்ட பொருள்கள் அழிப்பு

வவுனியா மேல் நீதிமன்றத்தால் 50 இற்கு மேற்பட்ட வழக்குகளுடன் தொடர்புடைய சான்று பொருள்கள் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.நிஹால் முன்னிலையில் அழிக்கப்பட்டன.

வவுனியா, மடுகந்த காட்டுப் பகுதியில் திங்கட்கிழமை இவை அழிக்கப்பட்டன.

கடந்த 2024, 2025 ஏப்ரல் வரையான காலப்குதிகளுக்குரிய 50 இற்கு மேற்பட்ட வழக்குகளுடன் தொடர்புடைய கஞ்சா உள்ளிட்ட பல்வேறுசான்றுப்பொருள்களே வழக்குகள் நிறைவடைந்த நிலையில் இவ்வாறு அழிக்கப்பட்டன.



பொலிஸ்பாதுகாப்புடன் எடுத்துவரப்பட்ட குறித்த பொருள்கள் மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் தீயில் எரித்து அழிக்கப்பட்டன.

100





# குயின்ஸ்லாந்தில் தமிழ் இலக்கிய விருது விழா

(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

ஆஸ்திரேலியாவில் குயின்ஸ்லாந்து மாநிலத்தில் தமிழ் விருது விழா நடைபெற உள்ளது.

தமிழ் இலக்கியத் தோட்டம் நடத்தும் விருது வழங்கும் விழாவும் இலக்கியச் சங்கமமும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3:30 முதல் மாலை 7:00 மணி வரை கிரேன்ஜ் சமூக மண்டபம், 187 வில்ஸ்டன் சாலை, நியூமார்க்கெட், குயின்ஸ்லாந்து 4051 எனும் முகவரியில் நடைபெறும்.

ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர், மூதறிஞர், கலாபூசணம், கலைமாமணி, தமிழ்மணி அகளங்கன் அவர்களுக்கும், தமிழ் நாட்டு தமிழறிஞர், நாவலர், எழுச்சிக் கவிஞர் எ.இரவிச்சந்திரன் (கதிர்மதியன்) அவர்களுக்கும் விருது வழங்கப்பட உள்ளது.

நீண்டகாலமாக தமிழ் இலக்கியத் துறையில் தொடர்ந்து பணியாற்றி வருவதுடன், அவர்களின் இலக்கிய பொன்விழா நிறைவையொட்டி மாபெரும் விருது வழங்கும் விழாவும் இலக்கியச் சங்கமமும் நடைபெற உள்ளன.

பல இலக்கிய ஆளுமைகள் கலந்து கொண்டு இவ்விரு இலக்கிய அறிஞர்களின் தமிழ் இலக்கியத் துறையில் ஆற்றிய சாதனைகளை எடுத்தியம்பி அவர்களைக் கௌரவிப்பதுடன் பல மேடை நிகழ்ச்சிகளும் அரங்கேறவுள்ளன.

குயின்ஸ்லாந்து வாழ் தமிழ் உறவுகள் அனைவரையும் அன்புடன் வருகைதர இலக்கிய விழாக்குழு அழைத்துள்ளது.

# சிவாச்சாரியார்கள் முன்னிலையில் சிவாச்சாரிய மங்கள நன்நீராட்டு!

( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கிருஷ்ணபிள்ளை பிரியதர்ஷன் சர்மாவிற்கு சிவாச்சாரிய மங்கள நன்நீராட்டு விழா இடம்பெற்றது.

சிவாச்சாரியார்கள் முன்னிலையில் சிவாச்சாரிய பட்டம் பெற்ற சிவஸ்ரீ பிரியதர்ஷன சர்மா இல்லாள் மேகலா சகிதம் கலந்துகொண்டு அனைவருக்கும் நன்றி கூறினார்.

காரைதீவு ஸ்ரீகண்ணகி அம்மன் ஆலயத்தில் அனைத்து குருமார்களுடனும் ஆலய நிர்வாகத்துடனும் மிகவும் சிறப்பாக இந் நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.





## 10 குற்றக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின் உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் 10 குழுக்களுடன் தொடர்புபட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு பிரிவின் அறிக்கைமூலம் தெரியவந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால சுட்டிக்காட்டியுள்ளார்.

## துப்பாக்கிச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதி செய்வது ஆளும்தரப்பின் அடிப்படைப் பணியாகும். இங்கு நாட்டில் சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வது ஆளும்தரப்பின் முதன்மைப்பொறுப்பாகவும் காணப்படுகிறது. இருப்பினும், நாடு முழுவதும் தற்போது நடைபெற்று வரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களைத் தடுக்க தற்போதைய ஆளும்தரப்புத் தவறியுள்ளது.

கடந்த 8 மாதங்களில் 79 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், 52 இறப்புகளும் பதிவாகியுள்ள சூழலில், இது தொடர்பாக ஆளும்தரப்புஎடுத்துள்ளநடவடிக்கைகள்குறித்து நாடாளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் தெரிவிப்பது ஆளும்தரப்பின் பொறுப்பாகும். இந்த விடயம் தொடர்பாக நானும், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பியிருந்தாலும், இதுவரை போதுமான தீர்வுகள் எதுவும் கிடைக்கவில்லை. எனவே, இதற்கான ஆளும்தரப்பின் பொறுப்புக்கூறல் குறித்து நான் பின்வரும் கேள்விகளை எழுப்புகிறேன்.

நாடு முழுவதும் நிகழ்ந்து வரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக ஆளும்தரப்பால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டம் போதுமானதாகஇல்லைஎன்பதைஆளும்தரப்பு ஏற்றுக்கொள்கிறதா? இல்லையெனில், இடைவிடாத துப்பாக்கிச் சூடுகள், கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களைத் தடுப்பதற்கான குறிப்பிட்டதொருதிட்டத்தை ஆளும்தரப்புஇந்த சபையில் முன்வைக்குமா?

நாடுமுழுவதும்வன்முறைஅதிகரிப்பதற்கும் தேசிய பாதுகாப்புக்கும் தொடர்பு இருப்பதை ஆளும்தரப்பு ஒப்புக்கொள்வதாக இல்லையா? வன்முறைஅதிகரிப்பால்வெளிநாட்டுசுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஈர்ப்பில் ஏற்படும் எதிர்மறை தாக்கம் குறித்து ஆளும்தரப்பு கவனம் செலுத்தியுள்ளதா?

நாடு முழுவதும் பரவியுள்ள போதைப்பொருள் போதைப்பொருளுக்கு நேரடியாகப் பலியாகி பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அதே நேரத்தில் அவர்களின் குடும்பங்களும் பாதிக்கப்படுகின்றன. போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு இடையிலானமோதல்களால்சாதாரணமக்கள் கூடப் பலியாகி வருகின்றனர். இது தொடர்பாக இதுவரைஆளும்தரப்பால்முன்னெடுக்கப்பட்ட திட்டம்தோல்வியடைந்ததாகத்தோன்றுவதால், இதற்கு ஏதேனும் மாற்றுத் திட்டம் உள்ளதா? அது யாது?

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்து, நேரடியாகவும்மறைமுகமாகவும்விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து ஆளும்தரப்பின் நிலைப்பாடு என்ன? பதிவான சம்பவங்கள் தொடர்பாக ஆளும்தரப்புமுன்னெடுத்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் யாது? இதுதொடர்பில் தெளிவான பதில் ஒன்றை எதிர்பார்க்கிறேன் என்றார்.

## கொழும்பில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்ட பாதுகாப்பு அதிகாரி, இது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இந்த துப்பாக்கி உண்மையானதா? இல்லையா? என்பது குறித்து விசாரணை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## போர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இங்கு வருகை தந்து எமது கடமையை நிறைவேற்றியிருக்கின்றோம். தேசிய போர் வீரர் நிகழ்வில் ஜனாதிபதி ஆற்றிய உரையை நான்கேட்கவில்லை.ஆனால்அமைதிக்காகவே அனைவரும் போர் செய்தனர். யாரையும் பழிவாங்குவதற்காகப்போர்இடம்பெறவில்லை. நாட்டைப் பாதுகாப்பதற்காகவே போரை மேற்கொண்டோம்.

யார் என்ன கூறினாலும், அடுத்து வரும் ஆளும்தரப்புக்கள் என்ன செய்தாலும் மக்கள் தேசிய போர் வீரர் நினைவு நாளை அனுஷ்டிப்பர். போர் என்பது பேரழிவுதான்.ஆனால்எமதுஇராணுவத்தினர் அதனை வெற்றி கொண்டனர். போர் என்பது இரு பக்கங்களைக் கொண்டது. நாட்டை பாதுகாப்பதற்கு போர் வெற்றியும் பாதுகாக்கப்படவேண்டும் என்றார்.

## இந்தியாவுடனான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் இருந்துகொண்டு போலியானகுற்றச்சாட்டுக்களைகுறிப்பிடாமல், உரிய நடவடிக்கை எடுங்கள் நாங்களும் பார்த்துக் கொள்கிறோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நாடாளுமன்றத்தில் தன்னிச்சையாக செயற்படும் பி.ஆர். பற்றிக் குறிப்பிட்டார். இந்த பி.ஆர். என்பவரால்தான் இந்த ஆளும்தரப்பு வெகுவிரைவில் வீழ்ச்சியடையும் என்பதை உறுதியாகக் குறிப்பிட்டுக்கொள்கிறேன். இந்த பி.ஆர். என்பவர் தன்னிச்சையாகவும், மூர்க்கத்தனமாகவும், முறையற்றவகையில் செயற்படுகிறார்.

நாடாளுமன்றத்தின் பேச்சுரிமையையும் தனக்கு ஏற்றாற்போல் முடக்குகிறார். இவ்வாறான நிலை கடந்த காலங்களில் இருக்கவில்லை. நாடாளுமன்ற செயலாளர் பிரிவும் இவரது முறையற்ற செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இந்த ஆளும்தரப்பு இந்தியாவுடன் கடந்த ஏப்ரல்மாதம் முதற்பகுதியில் 7 ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டது. அதேபோல் சீனாவுடனும் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இந்த ஒப்பந்தங்கள் ஏதும் இதுவரையில் நாடாளுமன்றத்துக்குச்சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட 7 ஒப்பந்தங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அண்மையில் வெளிவிவகாரத்துறை அமைச்சரிடம் வலியுறுத்தினார். வெகுவிரைவில் நாடாளுமன்றத்தக்கு சமர்ப்பிக்கப்படும் என்று வெளிவிவகாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டார். ஆனால் இதுவரையில் அந்த ஒப்பந்தங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்தியாவுடனான ஒப்பந்தங்களை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாயின் இந்தியாவின் அனுமதியை பெறவேண்டும் என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிடுகிறார். இந்தியாவின் அனுமதியை பெற வேண்டுமாயின் ஒப்பந்தத்தை கைச்சாத்திடாமல் இருந்திருக்கலாம்.

இந்தியாவுடன் இலங்கை கைச்சாத்திட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தம் பிரதான செய்தி வலைத்தளத்தில் வெளியாகியுள்ளன. இந்த ஒப்பந்தத்தில் ‘இலங்கையில் ஆயுத களஞ்சியசாலையை இந்தியாவினால் உருவாக்க முடியும்‘ என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்உண்மைத்தன்மைஎன்னவென்பதை இந்த நாடாளுமன்ற ம் அறிந்து கொள்ளக்கூடாதா?

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதற்கு இந்த ஆளும்தரப்பு ஏன் பின்வாங்குகிறது? கடந்த காலங்களில் தேசிய மக்கள் சக்தி எட்கா, சோபா மற்றும் இந்தியாவுடனான பல ஒப்பந்தங்களைக் கடுமையாக எதிர்த்தது. ‘இந்தியாவுடனான திருட்டு ஒப்பந்தங்களை கிழித்தெறிவோம்‘ என்று நாடு முழுவதும் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்தீர்கள் இன்று என்ன செய்கின்றீர்கள்?

இந்தியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் கூட்டாக இருந்துசீனாவுக்குஎதிராகச்செயற்படுகின்றன. இந்த நாடுகளுடன் இலங்கை பாதுகாப்பு தொடர்பில்ஒப்பந்தம்கைச்சாத்திடப்படும்போது ஏனைய நாடுகளால் அது உன்னிப்பாக பார்க்கப்படும்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் தற்போது முறுகல் நிலை காணப்படுகிறது. இதனால் இலங்கைக்கும் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு யார் பொறுப்பு சொல்வது? இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ளஒப்பந்தங்களில்இருந்து இலங்கையால்இலகுவில்விலக முடியாது. புலி வாலைப்பிடித்தகதையாகஇதுகாணப்படுகிறது.

ஆகவே இந்தியாவுடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களை இந்த வாரத்திலாவது ஆளும்தரப்புநாடாளுமன்றத்துக்குசமர்ப்பிக்க வேண்டும் - என்றார்.

# நாடாளுமன்றத்தில் கடும் அமளி துமளி

## 20 நிமிடங்களுக்கு சபை நடவடிக்கைகள் பாதிப்பு

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்வி எழுப்ப சபாநாயகர் அனுமதி மறுத்ததால் அரச தரப்பினருக்கும் எதிர்கட்சியினருக்கும்இடையில்சபையில்கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் சுமார் 20 நிமிடங்கள்வரை சபைநடவடிக்கைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாதாளக் குழுக்களின் செயற்பாடு மற்றும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பில் நிலையியற் கட்டளை 27/2 கீழ் எழுப்பிய கேள்விகளுக்கு பொதுமக்கள்பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால பதிலளித்தார்.

இதனையடுத்து, ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார், மேலும் சில கேள்விகளையும் எழுப்பியதுடன் சில குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்தார். அதனைத் தொடர்ந்து எழுந்த ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கௌஷல்யா ஆரியரத்ன, தயாசிறி எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை நிலையியற் கட்டளைக்கு முரணானது. சபையை தவறாக வழிநடத்தி இருக்கிறார் எனத் தெரிவித்தார். தயாசிறி அதற்கு பதிலளிக்க முற்பட்டபோது சபாநாயகர் அதற்கு அனுமதியளிக்கவில்லை. இதனால் கௌஷல்யாவைப் பார்த்து தயாசிறி ஏதோ தெரிவித்தார். ஆனால் அவரின் ஒலிவாங்கி முடக்கப்பட்டிருந்தது.

இதன்போது எழுந்த சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்னாயக்க கடும் தொனியில் தர்க்கத்தில் ஈடுபட்டார். ஜனாதிபதி நிதியத்தில் கொள்ளையடித்தவர், ஏழைகளின் பணத்தை சூறையாடியவர் என்றவாறாகக் கடும் ஆவேசமாக தயாசிறியைப் பார்த்துத் தெரிவித்தார்.

அமைச்சர் வசந்த சமரசிங்க உள்ளிட்டோருடன் இன்னும் சில அரச தரப்பினரும் சபை முதல்வருடன் சேர்ந்து எதிர்கட்சியினருக்கு எதிராகக் கருத்துக்களை முன்வைத்தனர். அரசு தரப்பினர் தமது கருத்துக்களை ஒழுங்குப் பிரச்சினை என்ற அடிப்படையில் முன்வைக்க அனுமதித்த சபாநாயகர் எதிர்கட்சியினருக்கு நேரம் வழங்க மறுத்து விட்டார். இதனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

தமிழ் அரரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரனுக்கு விசேட கூற்று முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட்டபோதும், அவர் உரையாற்ற முடியாதளவுக்கு சபை அமளிதுமளிபட்டுக்கொண்டிருந்தது. சிறீதரன் தனது கருத்துக்களை முன்வைக்க பல தடவைகள் முயன்றபோதும் அது முடியவில்லை.

இந்நிலையில் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, நான் 20 செக்கன்கள் இடையில் உரையாற்றியபோதுஎன்னைசபையிலிருந்து வெளியில் அனுப்பினீர்கள் ஆனால், தற்போது இவ்வளவு பேர் கூச்சலிட்டுக் கொண்டிக்கும்போது அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்களே ‘ என ஆவேசமாக தெரிவித்தார்.

இவ்வாறாக சபை நடவடிக்கைகள் சுமார் 20 நிமிடங்கள் வரை கடும் அமளி துமளிக்கு மத்தியில் இடம்பெற்றுக்கொண்டிருந்த நிலையில், இறுதியில் அனைவரும் அமைதியாகினர்.

## மே 23 தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலானசந்திப்புமே23வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காணிநிர்ணயகட்டளைச்சட்டத்தின்4ஆம் பிரிவின் கீழ் 28.03.2025 திகதியிடப்பட்டு, 2430இலக்கமிடப்பட்டுபிரசுரிக்கப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலில் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாதகாலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அதனை உடனடியாகத் திரும்பப் பெறுமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்தியுள்ளனர்.

அதனையடுத்து அவ்வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதைஇடைநிறுத்துவதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆளும்தரப்பு அறிவித்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேற்று செவ்வாய்கிழமை (20) பிரதமர் ஹரினி அமரசூரியவினால் அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில், இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் எழுந்திருக்கும் முரண்பாடுகள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் எதிர்வரும் மே 23 மு.ப 11.00 மணி முதல் பி.ப 1.00 மணிவரை நாடாளுமன்றத்தில் தனது தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

“காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வடக்கு மாகாணத்தின் காணிகளை நிர்ணயம் செய்வதற்காக இலக்கம் 2430 மற்றும் 28.05.2025 திகதியிட்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின்பிரகாரம்அந்தமாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் காணி நிர்ணயம் தொடர்பாக எழுந்துள்ள பிணக்குகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக எதிர்வரும் வெள்ளிக்கிழமை (28) மு.ப 11.00 - பி.ப 1.00 மணிவரை நாடாளுமன்றத்தின் குழு அறை 01இல் எனது தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்குஉங்களதுபங்கேற்பினை மிகவும்கௌரவத்துடன் எதிர்பார்க்கின்றேன்“ என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# என்னை அடக்குவதற்கே வழக்கு தொடுத்தது அரசு



## சாமர சம்பத் சபையில் விளாசல்

என்னை அடக்குவதற்கே ஆளும்தரப்புப் போட்டி போட்டுக்கொண்டு எனக்கு எதிராக வழக்கு தொடுத்திருந்தது. வழக்குத் தொடுத்தது தொடர்பில் பரவாயில்லை. ஆனால் அசிங்கப்படாமல் அதனை செய்துகொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் ஷாமரசம்பத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற உற்பத்தி தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:

இரண்டு மாதங்கள் சிறையில் இருந்தேன். இரண்டு நீதிமன்றங்களில் போட்டிக்கு எனக்கு எதிராக வழக்கு தொடுத்தார்கள். கொழும்பில் 3 வழக்குகள் பதுளையில் ஒரு வழக்கு. கொழும்பு நீதிமன்றில் பிணை வழங்கும்போது பதுளை நீதிமன்றில் அது மறுக்கப்படுகிறது. பதுளை வழங்கில் பிணை வழங்கப்படும் எனத் தெரிந்துகொண்டு, கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் பிணை வழங்குவதை நிராகரிக்குமாறு தெரிவித்து மேலுமொரு குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

வழங்கு தொடுத்ததுகூடப் பரவாயில்லை.ஆனால் அசிங்கப்படாமல் அதனை செய்துகொள்ள வேண்டும். எனக்குப் பிணை வழங்க மறுப்பதற்கு அவர்கள் தெரிவித்த காரணம்தான் வேடிக்கையானது, எனது மனைவி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து, எனக்கு பிணை வழங்குவது தொடர்பில் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்துமாறு தெரிவித்துள்ளாராம்.

கேஸ் சிலிண்டரின் தலைவர் என்ற வகையில் எனது மனைவியை ரணில் விக்ரமசிங்க அழைத்திருந்தார்.அதனால் எனது மனைவி அவரை சந்தித்திருக்கிறார். ரணில் விக்ரமசிங்க அவரது மனைவி தெரிவிப்பதைக்கூட செயற்படுத்த மறுக்கும் நிலையில் எனது மனைவி சொல்வதையா செய்வார்?

ரணில் விக்ரசிங்க என்பவர் உலகத்தை விழுங்கி, தண்ணீர் குடிக்காமல் இருக்கும் ஒருவர். அதனால் ரணில் விக்ரமசிங்க எனது மனைவி தெரிவிப்பதை செய்யும் நபர் அல்லர். ரணில் விக்ரமசிங்க செய்தியாளர் சந்திப்பு நடத்தியதால் மக்கள் தூண்டப்படுகின்றனர் என்று தெரிவித்து, எனக்கு பிணை வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது நகைச்சுவையாகும். என்றாலும் இரண்டு மாதங்களுக்கு பின்னர் எனக்கு பதுளை நீதிமன்றம் பிணை வழங்கி இருக்கிறது.

மாகாண சபையின் நிலுவைப் பணத்தை மீள பெற்றதாகவே எனக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டது. ஆனால் அரசமைப்பின் பிரகாரம் மாகாணசபைக் கூட்டு நிதியத்தில் வைப்புச் செய்யப்படும் பணம், மீள பெறப்பட்டால் அதனை அந்த வருடத்துக்குள் செலவழிக்க வேண்டும்.

அப்படியானால் வழக்கு தொடுத்திருக்க வேண்டி இருப்பது கூட்டு நிதியத்தில் பணத்தை வைப்பு செய்து நிறுத்தி வைத்துக்கொண்டிருந்தவர்களுக்கு எதிராகவே. அதனால் வழக்கொன்று தொடுக்கும்போது அது தொடர்பில் நன்கு தெரிந்துகொண்டு வழக்குத் தொடுக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல் சும்மா அசிங்கப்படக்கூடாது.

அத்துடன் வெள்ளையர் காலத்தில் இருந்து எமது நாட்டில் உப்புக்குத் தட்டுப்பாடு இருக்கவில்லை. இந்த ஆளும்தரப்பின் காலத்திலேயே நாட்டில் உப்பு இல்லாத பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இது ஆளும்தரப்பின் இயலாமையாகும். ஆளும்தரப்பு இதனை ஏற்றுக்கொள்ளவேண்டும். எமது இயலாமமையாலே 2022இல் நாட்டில் போராட்டம் ஒன்று ஏற்பட்டது. அதனாலே இந்த ஆளும்தரப்புக்கு மக்கள் வாக்களித்தார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது - என்றார்.

# ஜனாஸா சந்தூக்கு அன்பளிப்பு

(ஹாரிஸ்)



நாவிதன்வெளி 4 ஆம் கிராம ஜாமிஉத் தௌஹீத் ஜும்மா மஸ்ஜித் நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பிரதேச சபை உறுப்பினர் தொழிலதிபர் நளீரின் முயற்சியால் ஆஸ்திரேலியா நாட்டில் வசிக்கும் தனவந்தர் ஒருவரின் நிதி உதவியின் ஊடாக மஸ்ஜிதுக்கு தேவையான ஜனாஸா சந்தூக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் முன்னால் பிரதி தவிசாளர் ஏ.கே. அப்துல் சமட், பள்ளிவாசல் நிர்வாகிகள், முன்னாள் வேட்பாளர்கள் மற்றும் நளீர் பௌண்டேஷன் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




காலைக்கதிர் Kalaikkathir

# பஸில் நாடு திரும்வேண்டும் நாமல் ராஜபக்ச அழைப்பு

பஸில் ராஜபக்ச அமெரிக்காவில் இருக்கிறார் எனவும், தற்போது தலைமறைவாக இருக்கிறார் எனவும், நாட்டுக்கு வர மாட்டார் என்றும் ஆளும்தரப்புக்காலத்துக்கும்கூறிக்கொண்டிருக்கிறது. எனவே ஆளும்தரப்புக்கு பதிலளிப்பதற்காகவே அவர் நாட்டுக்கு வர வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

பொது ஜன பெரமுன தலைமை அலுவலகத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

பஸில் ராஜபக்சவுக்கு நாட்டுக்கு வருவுவதற்கு உரிமை இருக்கிறது. அவர் வரவில்லை எனில் தலைமறைவாக உள்ளார் என்று கூறுகின்றனர். வந்தால் நாமலுக்கு உதவுவதற்காக வருகிறார் என்று கூறுகின்றனர். இவற்றில் எது சிறந்தது என்பதே தெரிந்து கொள்ளப்படவேண்டியது.

அவர் நாட்டுக்கு வரவேண்டும். ஆளும்தரப்பால் அவர் மீது சுமத்துப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கவேண்டும். சவால்களை எதிர்கொள்வதோடு அவற்றுக்கு பதிலளிக்கவேண்டும். அவர் தொடர்பான பிரச்சினைகளுக்கு நாமல் ராஜபக்சவுக்கோ அல்லது மஹிந்த ராஜபக்சவுக்கோ பதிலளிக்க முடியாது. தன் மீதான குற்றச்சாட்டுகளை நேரடியாக எதிர்கொண்டு அவற்றுக்கு பதிலளித்து தான் குற்றமற்றவர் என்பதை அவர் நிரூபிக்க வேண்டும்.

அப்போதுதான் இந்த ஆளும்தரப்புக்கு யார் சரி, யார் தவறு என்பது புரியும். பஸில் ராஜபக்ச அமெரிக்காவில் இருக்கிறர், தற்போது தலைமறைவாக இருக்கிறார், நாட்டுக்கு வர மாட்டார் என்றும் ஆளும்தரப்பு காலத்துக்கும் கூறிக்கொண்டிருக்கிறது. அவர் நாட்டுக்கு வந்து விட்டரெனில் அந்த பேச்சுக்களும் முடிந்துவிடும்.

நாமல்ராஜபக்சவுக்கு உதவுவதற்கு பசில்நாட்டுக்கு வரவேண்டியதேவைஇல்லை.அமெரிக்காவிலிருந்துகூட உதவ முடியும். எவ்வாறிருப்பினும் இந்த ஆளும் தரப் புப் பதிலளிப்பதற்கு அவர் நாட்டுக்கு வர வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும் - என்றார்.

## தேசிய போர் வீரர்கள் தின அழைப்பிதழில் ஜனாதிபதியின் பெயர் ஏன் இருக்கவில்லை?

## காவிந்த எம்.பி. கேள்வி



தேசிய போர்வீரர் நினைவு தின நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பங்கேற்காமல் இருப்பதற்கு திட்டமிட்டிருந்தாரா? நிகழ்வுக்கான அழைப்பிதழில் பாதுகாப்பு பிரதி அமைச்சரின் பெயர் பிரதம அதிதி எனக் குறிப்பிட்டிருந்தமைக்கான காரணம் என்ன என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன கேள்வி எழுப்பினார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்ற செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையில் நடைபெற்ற போர் வீரர் நினைவு தின நிகழ்வில் ஜனாதிபதி கலந்துகொண்டார். ஆனால், அழைப்பிதழில் ஜனாதிபதிக்கு பதிலாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் பிரதம விருந்தினர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்கு ஜனாதிபதி ஏற்கனவே திட்டமிட்டிருந்தார் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார். அவ்வாறெனில் அழைப்பிதழில் ஜனாதிபதியின் பெயர் ஏன் குறிப்பிடப்படவில்லை? அமைச்சர் விஜித ஹேரத் கூறியது பொய்யா? அவர் கூறியதைப் போன்று ஜனாதிபதி ஏற்கனவே இந்த நிகழ்வில் கலந்துகொள்ள திட்டமிட்டிருந்தால், அவரது பெயர் ஏன் பிரதம விருந்தினராக அச்சிடப்படவில்லை?

எதிர்க்கட்சிகளிலும், சமூக வலைத்தளங்களிலும் ஜனாதிபதி இந்த நிகழ்வில் கலந்துகொள்ளாமை தொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதன் காரணமாகவே, ஜனாதிபதிக்கு எதிரான விமர்சனங்கள் தீவிரமடைந்ததன் காரணமாகவே அவர் இறுதி நேரத்தில் அந்த நிகழ்வில் பங்கேற்றார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத், இந்தக் குழப்பத்திற்கு அதிகாரி ஒருவரின் தவறான தகவல் தொடர்பு காரணம் என்றும், அது அடையாளம் காணப்பட்டவுடன் சரி செய்யப்பட்டதாகவும் கூறினார். ஆனால், அது உண்மையல்ல - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு சிறுவர் இல்லங்களில் சிறுவர்களின் வரவு அதிகரிப்பு

## பராமரிப்பில் சவால்கள் உள்ளது என்கிறார் வடக்கு ஆளுநர்!



சிறுவர்இல்லங்களைநோக்கிஅதிகளவான சிறுவர்கள் கொண்டுவரப்படுகின்றனர். இது எமக்கும், சிறுவர்களை பராமரிக்கும் நிறுவனங்களுக்கும் சவாலாக மாறியுள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - அரியாலையில் அமைந்துள்ள எஸ்.ஓ.எஸ். தொழிற்பயிற்சி நிலையத்தில் கற்கைநெறிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கான என்.வி.க்யூ. தரச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே ஆளுனர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் சான்றிதழ்களை வழங்கிய பின்னர் ஆளுநர் மேலும் உரையாற்றியதாவது -

சிறுவர்இல்லங்களைநோக்கிஅதிகளவான சிறுவர்கள் கொண்டுவரப்படுகின்றனர். காலத்தின் சூழலாக அது மாறியிருக்கின்றது. அது எமக்கும் சிறுவர்களை பராமரிக்கும் நிறுவனங்களுக்கும் சவாலாக உள்ளது.

இந்த நிறுவனம் வழங்கும் தொழிற் பயிற்சி, மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் எந்தளவுக்கு முன்னேறுகிறார்கள் என்பதில்தான் அதன் வெற்றி அமைகிறது. என்வி.க்யூ. தரச்சான்றிதழைப் பயன்படுத்தி மாணவர்கள் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகளைப் பெறலாம். மேலும் கல்வியைத் தொடரவும் முடியும்.

தொழில் தகைமையுடன் படிப்பை முடிக்கும் இவர்கள், எதிர்காலத்தில் தொழில்முனைவோர்களாக மாறி மற்றவர்களுக்கும் வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும் என்றார்.

தூரப் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் பயிற்சி பெறுவதற்காக விடுதி வசதிகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை நிறுவனம் முன்னெடுத்திருப்பதையும் அவர் பாராட்டினார்.

இந்நிகழ்வில், வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் சுஜீவா சிவதாஸ் கௌரவ விருந்தினராகவும், எஸ்.ஓ.எஸ். சிறுவர் கிராம தேசிய இயக்குநர் திவாகர் ரட்ணதுரை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

# சங்கிலியன் மன்னனின் நினைவு தினம் யாழ்ப்பாணத்தில் நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த 2 ஆம் சங்கிலியன் மன்னனின் 406ஆவது நினைவு தினம் நேற்றைய தினம் (செவ்வாய்க்கிழமை) யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள சங்கிலியன் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து, 2ஆம் சங்கிலிய மன்னனின் வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய நூலொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.



சிவசேனையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஓய்வு நிலை பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மருதனார் மடம் ஆஞ்சநேயர் கோவில் ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள், இந்திய துணைத் தூதரக அதிகாரி நாகராஜன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். மாநகர ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன், மதத் தலைவர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.05.2025இல் வெளியிடப்பெற்றது